[1990 மே 5

உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்கு

*4919 திரு. துரை சந்திரசேகரன் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் -- கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சாவூர் வட்டம், மாத்தூர் மேற்கு ஊராட்சி மன்றத்தில் ஒரு உணவுப் பொருள் சேமிப்புக் கிடங்கு புதிதாகக் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எத்தனை உணவு சேமிப்புக் கிடங்குகள் உள்ளன? இந்த ஆண்டு புதிதாக எத்தனை கட்டப்படவுள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மொத்தம் எத்தனை உணவுக் கிடங்குகள் உள்ளன என்பது பற்றிய விவரம் இல்லை. ஒரு தாலுக்காவிற்கு ஓர் உணவுக் கிடங்கு என்கின்ற அடிப்படையில் தமிழகம் முழுவதும் கட்டப் பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் தண்ணீர் தேங்குகின்ற பள்ளப் பகுதிகளில் கட்டப்பட்டுள்ள உணவு சேமிப்புக் கிடங்குகள் மாற்றியமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையின் அடிப்படையில் மாற்றங்கள் செய்யப்படும்.

1990 மே 5]

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பல இடங்களில் உணவுக் கிடங்குகள் இல்லாமல், சாலைகளிலேயே மூட்டைகளை அடுக்கி வைத்து இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட இடங்களிலாவது இந்த ஆண்டு உணவுக் கிடங்குகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா? அதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவுக் கிடங்குகள் தாலுக்காவிற்கு ஒன்று என்ற வீதத்தில் கட்டப்பட்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் கேட்பது, நேரடி கொள்முதல் நிலையம் என்று சொன்னால், அது தஞ்சை மாவட்டத்திலே தொடர்ந்து கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-15 மணி

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது உணவுப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கான கிடங்குகள் தாலுக்காவிற்கு ஒன்று கட்டப்பட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். எனக்குத் தெரிந்த வரை தஞ்சை மாவட்டத்தில் அப்படி தாலுக்காவிற்கு ஒரு உணவுக் கிடங்கு கட்டப்பட்டு இருப்பதாகத் தெரியவில்லை. ஏனென்றால் தஞ்சை மாவட்டம் முழுவதிலும் ஏகபோகக் கொள்முதல் நாம் தொடர்ந்து செய்ய வேண்டிய ஒரு அவசியம் இருக்கிறது. 10 இலட்சம் டன்கள் வரையிலே கொள்முதல் செய்யும்போது அதைப் பல இடங்களிலே கொண்டுபோய் கிடங்குகளிலே அடுக்குவதில் பல தவறுகளும் நடந்து உணவுத் துறைக்கு பெரும் நஷ்டம் ஏற்படக் கூடிய நிலையில் இருக்கிறது. இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, அந்த உணவுக் கிடங்குகளை கொஞ்சம் அதிகமாக ஒதுக்கீடு செய்து, அங்கு கட்டுவதற்கு முயற்சி எடுப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நேரடி கொள்முதல் நிலையங்கள், தஞ்சாவூர் மாவட்டத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 1988—89 மற்றும் 1989—90 இல் தஞ்சாவூர் மாவட்டத்தில், 60 இலட்சம் செலவில், 30 கிராமங்களில் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 14 கிராமங்களில், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படையில், நேரடிக் கொள்முதல் மையங்கள் தஞ்சாவூர் மாவட்டத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாடகைக் கட்டிடத்தில் இயங்கும் சேமிப்புக் கிடங்குகள் எத்தனை? சொந்தமான கட்டிடங்களில் இருக்கின்ற சேமிப்புக் கிடங்குகள் எத்தனை என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய விவரங்களை அறிய தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடிக் கொள்முதல் நிலையம் வேறு; கிடங்குகள் வேறு; எனது தொகுதியில் மானோஜிபட்டியில் நெல் மூட்டைகளைக் கொண்டு வந்து தரையிலே அடுக்கியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது).

சர்க்கரை விநியோகத்தை முறைப்படுத்துதல்.

*7104. திரு. பெ.சு. திருவேங்கடம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மத்திய அரசு, மாநில அரசின் உணவுத்துறை செயலாளர்களின் கூட்டத்தை டெல்லியில் கூட்டி சர்க்கரை விநியோகத்தை முறைப்படுத்த ஆலோசனை வழங்கியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மைய அரசின் ஆலோசனைப்படி 1989 ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் ஆகிய 4 மாதங்களில் சர்க்கரை ஆலைகளிலிருந்து சர்க்கரையைக் குவிண்டால் ரூ. 640-க்குக் குறைந்த விலையில் வாங்கி, கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கடைகள் மூலம் கிலோ ரூ. 7.50 என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டது.